## சுருக்கம்

நெடுஞ்சாலைத்துறை – திட்டங்கள் அலகு – இரயில்வே பணித்திட்டம் – 2011–2012–ல் அவினாசி – திருப்பூர் - பல்லடம் – பொள்ளாச்சி – கொச்சின் (வழியாக) மீன்கரை சாலை கி.மீ 80/4–ல் உள்ள இரயில்வே கி.மீ 2/1–2–ல் உள்ள கடவு எண்.3 க்கு மாற்றாக பொள்ளாச்சி–ஆனைமலை இரயில்வே நிலையங் களுக்கிடையே சாலை கீழ்பாலம் கட்டும் பணிக்கு ரூ.33,50,74,717/–ற்கு இரண்டாவது திருத்திய நிர்வாக ஒப்புதல் – திருத்திய நிர்வாக குழுவால் பரிந்துரைக்கப்பட்டது – ஆணை – வெளியிடப்படுகிறது

நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் (எச்பி2) துறை

அரசாணை (நிலை) எண்.3 நாள்: 03 .01.2020

விகாரி மார்கழி 18, திருவள்ளுவர் ஆண்டு 2050

படிக்கவும்:

1. அரசாணை (நிலை) எண்.289, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.என்1) துறை நாள் 04.12.2008.
2. அரசாணை (டி) எண்.200, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.க்யூ2) துறை நாள் 07.12.2011
3. அரசாணை (நிலை) எண்.99 நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.என்1) துறை நாள் 26.08.2016
4. அரசாணை (நிலை) எண்.61 நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.ப்பி2) துறை நாள் 25.04.2018
5. தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்) அவர்களின் கடித எண்.3024/ வே3/ 2011 நாள் 10.10.2019

********

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் நிதி மற்றும் நெடுஞ்சாலைத்துறைகளின் பிரதிநிதிகள், முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலை மற்றும் சம்பந்தப்பட்ட நெடுஞ்சாலைத்துறையின் தலைமைப் பொறியாளர்களைக் கொண்டு திருத்திய நிர்வாக ஒப்புதல் குழு அமைக்கப்பட்டது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் இரயில்வே பணித் திட்டம் 2011–2012–ன் கீழ் அவினாசி–திருப்பூர்–பல்லடம்–பொள்ளாச்சி–கொச்சின் (வழியாக) மீன்கரை சாலை கி.மீ 80/4–ல் உள்ள இரயில்வே கி.மீ 2/1–2–ல் உள்ள கடவு எண்.3க்கு மாற்றாக பொள்ளாச்சி–ஆனைமலை இரயில்வே நிலையங்களுக்கு இடையே சாலை மேம்பாலம் அமைத்தல் (நில எடுப்பு உட்பட) பணிக்கு ரூ.20.42 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மேற்கண்ட பணிக்கு இரயில்வே பணித்திட்டம் 2011–2012–ன்கீழ் "அவினாசி–திருப்பூர்–பல்லடம்–பொள்ளாச்சி–கொச்சின் (வழியாக) மீன்கரை சாலை கி.மீ 80/4–ல் உள்ள இரயில்வே கி.மீ 2/1–2–ல் உள்ள கடவு எண்.3க்கு மாற்றாக பொள்ளாச்சி–ஆனைமலை இரயில்வே நிலையங்களுக்கிடையே சாலை கீழ்பாலம் கட்டுதல்" என பெயர் மாற்றம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. இப்பணிக்கு மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில் ரூ.32,23,00,000/–க்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

4. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) திட்டங்கள் அவர்களின் இரண்டாவது திருத்திய நிர்வாக ஒப்புதல் கோரும் கருத்துருவானது 25.09.2019 அன்று கூடிய திருத்திய நிர்வாக ஒப்புதல் குழுவில் வைக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்புதல் குறிப்புரை பெறப்பட்டுள்ளது:

| வ. எண். | பணியின் பெயர் | நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட அரசாணை மற்றும் தொகை (ரூபாயில்) | திருத்திய நிர்வாக ஒப்புதல்–I வழங்கப்பட்ட அரசாணை மற்றும் தொகை (ரூபாயில்) | திருத்திய நிர்வாக ஒப்புதல்–II கோரும் தொகை (ரூபாயில்) | திருத்திய நிர்வாக ஒப்புதல் கோருவதற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| 1. | அவினாசி–திருப்பூர்–பல்லடம் – பொள்ளாச்சி–கொச்சின் (வழியாக) மீன்கரை சாலை கி.மீ 80/4–ல் உள்ள இரயில்வே கி.மீ 2/1–2–ல் உள்ள கடவு எண்.3க்கு மாற்றாக பொள்ளாச்சி–ஆனைமலை இரயில்வே நிலையங்களுக் கிடையே சாலை கீழ்பாலம் அமைத்தல் | அரசாணை (நிலை) எண்.200 நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்க்யூ2) துறை நாள் 07.12.2011<br><br>20,42,00,000/– | அரசாணை (நிலை) எண்.61 நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்பி2) துறை நாள் 25.04.2018<br><br>32,23,00,000/– | 33,50,74,717 | • நில எடுப்பு பணிக்கு கூடுதலாக தேவைப்படும் நிதி (Land Acquisition)<br>• சேவைச் சாலை அமைத்தல் பணிக்கு கூடுதலாக தேவைப்படும் நிதி (Provision for Service Road)<br>• நடைபாதை மற்றும் வடிகால் அமைத்தல் பணிக்கு கூடுதலாக தேவைப்படும் நிதி (Provision for footpath cum drain)<br>• விளம்பரக் கட்டணத்திற்கு கூடுதலாக தேவைப்படும் நிதி (Provision for Advertisement charges) |

5. தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) திட்டங்கள் அவர்களின் கருத்துருவானது அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, அதனை ஏற்று "அவினாசி–திருப்பூர்–பல்லடம்–பொள்ளாச்சி–கொச்சின் (வழியாக) மீன்கரை சாலை கி.மீ 80/4–ல் உள்ள இரயில்வே கி.மீ 2/1–2–ல் உள்ள கடவு எண்.3க்கு மாற்றாக பொள்ளாச்சி–ஆனைமலை இரயில்வே நிலையங்களுக்கிடையே சாலை கீழ்பாலம் அமைக்கும் பணிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் குழுவில் ஒப்புதலளித்துள்ளவாறு ரூ.33,50,74,717/– (ரூபாய் முப்பத்து மூன்று கோடியே ஐம்பது இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து எழுநூற்று பதினேழு மட்டும்)–ற்கு இரண்டாவது திருத்திய நிர்வாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

5054–சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு–80–பொது–800–ஏனைய செலவு–மாநிலச் செலவினங்கள்– JJ தற்போதுள்ள இருப்புப்பாதை கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலங்களும் / சுரங்கப் பாதைகளும் கட்டுதல்–416–பெரும் பணிகள்–01 . பெரும் பணிகள்.
(த.தொ.குறியீடு எண்.5054–80–800–JJ–1604)
(IFHRMS: 5054–80–800–JJ–41601)

7. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவுடன் அத்துறையின் அ.சா. எண்.66022/பொ.ப.1/2019 நாள் 30.12.2019 -ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசன்
அரசு முதன்மை செயலாளர் (மு.கூ.பொ)

<u>பெறுநர்</u>

முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை, சென்னை–25
தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) திட்டங்கள், சென்னை–25
மாநில கணக்காயர், சென்னை–18/35

<u>நகல்</u>

நிதி (பொ.ப.1 / வ.செ.பொது.I/வ.செ.பொது.II) துறை, சென்னை–9
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கூடுதல் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
முதன்மைச் செயலாளர் (நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை) அவர்களின் தனிச் செயலர், சென்னை–9
கூடுதல் செயலாளர் (நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9
இ.கோ/உதிரி நகல்
கோப்பு எண்.13053/எச்பி2/2019

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்